Registered as a Newspaper in Ceylon ★ ✱ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 244
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக புரட்டாதி 26 றஜப் 19 சனிக்கிழமை (12-10-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
... வீதி கொழும்பு

# 55 வயது அரசாங்க ஊழியருக்கு கட்டாய ஓய்வு

## திட்டத்தை அமுல் நடத்த திறைசேரி தயாராகிறது

கொழும்பு, வெள்ளி

**55 வயதான அரசாங்க ஊழியர் தமது சேவையிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறவேண்டும். இந்தப்புதிய சட்டத்தை அரசாங்கம் விரைவில் அமுல் நடாத்தவிருக்கிறது.**

திறைசேரி இப்போது 55 வயதான சகல அரசாங்க ஊழியர்களின் பட்டியலை இரகசியமாக சேகரித்துக்கொண்டிருக்கிறது.

சிறுஊழியர் தொடக்கம் நிரந்தரக்காரியதரிசி வரையான சகல ஊழியர்களும் 55 வயதானதும் கட்டாயமாக ஓய்வுபெறவேண்டுமென்ற இந்த உத்தரவு விரைவில் அமுலுக்குவரவுள்ளது.

தொழில் நுட்பத்துறை, மற்றும் சில அத்தியாவசிய சேவைகளிலுள்ளவர்களுக்கு மட்டும் [illegible] உத்தரவுடன் இந்த நியதியை தவிர்க்கப்படலாம் என அறியப்படுகிறது.

55 வயதானவர்கள் ஓய்வு பெறவேண்டுமென்ற சட்டம் இருந்துவந்தபோதிலும் 5 வருடம் ஊழியரின் சேவை நீடிக்கப்பட்டுவந்தது தெரிந்ததே.

நாட்டில் ஏற்பட்டுவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது 55 வயது கட்டாய ஓய்வுத்திட்டம் குறைக்குமென அரசாங்கம் கருதுகிறதாம். இதனாலேயே இத்திட்டத்தை கடுமையாக அமுலாக்கவிருக்கிறது.

பல தொழிற்சங்கம் இந்த 55 வயது கட்டாய ஓய்வை அமுல் நடாத்தும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளதாம். பல அரசாங்க ஊழியரின் பதவி உயர்வுகள் இத்திட்டம் அமுல்படுத்தப்படாததால் தடைப்படுவதாக தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளனவாம்.

## 'தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம்'

### உயர் கல்விச் சபைக்கு பட்டதாரி மாணவர் எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

கொழும்பு பல்கலைக்கழகத்தை 2-ம் தர பல்கலைக்கழகமாக்கி பேராதனைப் பல்கலைக்கழகத்தை முதன்மையாக்க நடவடிக்கை மேற்கொள்வதாக தேசிய உயர் கல்விச்சபையிடம் கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு கூடுதலான மாணவர்களை அனுப்பி வைப்பதிலிருந்து இத் திட்டம் தெளிவாக வருகிறதென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இவ்வித நடவடிக்கையை உடன் கைவிடாதுவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலைமை ஏற்படுமென தேசிய உயர் கல்விச் சபையை கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் எச்சரித்துள்ளனர்.

---

### கதம்பவிழா

காங்கேசன்துறை, சனி

தையிட்டி கிராமமுன்னேற்றச்சங்கம், கிராம அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் இன்று கதம்பவிழா நடைபெறவிருக்கிறது. நடேஸ்வராக் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறும் இவ்விழாவுக்கு வலி-வடக்கு காரியாதிகாரி திரு மற்றிக் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## 4 தினங்களுக்குள் மூன்றரைலட்சம் ரூபாய்

யாழ்ப்பாணம், சனி

3 லட்சத்து 64 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உயர்ரக சேலைகளும், பட்டு வேட்டிகளும், சாரங்களும், அழகு சாதனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இவைகள் இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதென்ற சந்தேகத்தின் பேரில் இவைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

கடந்த நான்கு தினங்களிலும் இந்த ஜவுளிகளும், பொருள்களும் யாழ்ப்பாண நகரம், ஆனைக்கோட்டை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் கடைகளிலும், வீடுகளிலும், காரிலும், வள்ளத்திலும் வைத்துக் கைப்பற்றப் பட்டன.

இம்மாதம் 7-ம் திகதி ஆனைக்கோட்டையில் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஜவுளிகளும், பொருள்களும், 9-ம் திகதி யாழ் நகரில் மூன்று வீடுகளில் 62 ஆயிரம் ரூபா பெறுமதியான ஜவுளிகளும் நேற்று அதிகாலை வல்வெட்டித்துறையில் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான ஜவுளிகளுமே கைப்பற்றப்பட்டனவாகும்.

கடைசியாக நேற்றுமாலை இன்ஸ்பெக்டர் டயஸ் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று ஆனைக்கோட்டையிலுள்ள வீடொன்றில் சுமார் 2,500 ரூபாய் பெறுமதியான ஜவுளிகளைக் கைப்பற்றியது. இதுவரை கைப்பற்றப்பட்ட சகல ஜவுளிகளும் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. விசாரணை நடைபெறுகின்றது. [ஈ.நி]

## யாழ். நகரில் 500 நெஸ்கபே டின்கள்

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றிலிருந்து பதுக்கிவைக்கப்பட்டிருந்த 500 'நெஸ்கபே' டின்கள் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் காலியோ டயஸ் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரால் கைப்பற்றப்பட்டது.

இப்பொருட்கள் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிசார் கடைச்சொந்தக்காரரை விசாரணை செய்துவருகின்றனர்.

## மாவிட்டபுரம் ஆலய பிரவேச வழக்கு

### தீர்ப்பு 19ல்

நல்லூர், வெள்ளி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச வழக்கு தீர்ப்பு அளிப்பது பின்போடப்பட்டுள்ளது. இன்று இந்த தீர்ப்பு வழங்கப்படுமென சென்ற தவணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கு இன்று காலை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 19-ம் திகதிக்கு மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

இவ்வழக்கின் தீர்ப்பை அறிவதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை மாதம் 1-ம் திகதி மட்டுவிலைச் சேர்ந்த முருகன் சின்னராசாவை மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் சென்றுவழிபட சாதியின்பேரால் தடுத்ததாக வி. சுந்தரலிங்கம் மீது சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தலைமைப் பொலிஸ் [illegible] குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## "தேச ஒற்றுமையை நிலைநாட்டவேண்டும்"

கொழும்பு, வெள்ளி

"உலகில் இளைஞர்களின் தொகை அதிகரித்து வரும் பொழுது, இலங்கையில் வேலையற்ற இளைஞர்களின் தொகை பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இளைஞர் [illegible] முன்வரவேண்டும்."

இவ்வாறு இன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவை சபையை அங்குரார்ப்பணம் செய்துவைத்த பொழுது பேசுகையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கூறினார்.

## 'ஓய்வுபெற்றபின்பே மொழிப்பற்று வருகிறது'

அளவெட்டி, வெள்ளி

"அரசாங்கத்தில் பதவி வகிக்கும் போது மக்களுக்கு சேவைசெய்யும் பொது நோக்கம் அநேகமாக நமது பெரியார்களின் மனதில் தோன்றுவதில்லை. வயது வந்து ஓய்வுபெற்ற பின்பே அவர்களில் தமிழுணர்ச்சியும் மொழிப்பற்றும் சமயப்பற்றும், தேசபக்தியும் அநேகமாக வருகிறது. இது வெட்கத்துக்கும் வேதனைக்குமுரிய செயலாகும். இப்பெரியார்கள் தாங்கள் பெரும் பதவிகளிலிருக்கும் போது பொதுநோக்கோடு சிந்தித்திருந்தால் நமக்கு மட்டுமல்ல நமது நாட்டுக்கு எத்தனையோ அரிய செயல்களை செய்திருக்கமுடியும்."

இவ்வாறு இரசிகமணி கனகசெந்திநாதன் கன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மத்திய பிரிவு மாணவர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு
13—10—68 போயா தினத்திலும்
20—10—68 போயா தினத்திலும்
எமது ஸ்தாபனத்தில் வியாபாரம் நடைபெறும்.
உங்களுக்குத் தேவையான
எல்லாவிதமான ஜவுளிகளையும்
பெற்று மகிழ விஜயஞ் செய்யுங்கள்.

கணேசானந்தாஸ்

/முட்டாசுக்கடை சந்தி/
208 கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

6வது தென்னிந்திய சுற்றுலா

15-12-68 தொடக்கம்-14 நாட்கள் பஸ் மூலம் —மதுராஸ் திருச்சி மைசூர் பெங்களூர். திருப்பதி. சிதம்பரம் கன்யாகுமரி. குற்றாலம், திருச்செந்தூர், பழநி, திருப்பரங்குன்றம், சுவாமிமலை அழகர்கோவில் திருத்தணி வேளாங்கண்ணி, நாகூர் மற்றும் விதலங்கள்- விபரங்கட்கு 'டிரேவிலிங்ஸ்' அரசாங்கப் பதிவுள்ளது/ 125 முத்துவாசல்வீதி /Mutwal st/ கொழும்பு 15, எலக்றிக் ஹௌஸ், 120 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம், மோகன் பஸ்ஸி சர்குலேசன், வல்வெட்டித்துறை. 1010

அரசாங்க கேள்விகள்
கல்வித் திணைக்களம்

எஸ் 8773- ஊ/ எனிட்ட தொழில் நுட்பப் பாடசாலையில் போசனசாலை அமைத்தல். கேள்விகள் முடிவுதிகதி 2-11-68. இதன் முழு விபரங்களுக்கும் 11-10-68இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும். G.P,56

விற்பனைக்கு

புத்தகம்

திரு வே. சிவக்கொழுந்துவின் 3-ம்வகுப்பு சூழல். அன்னாரின் பிரசுரங்கள் தொடர்ந்தும் கிடைக்கும். விபரங்களுக்கு: லட்சுமி புத்தகசாலை, பருத்தித்துறை. 263

ஸ்ரீநகர், ஒக். 11

இந்திய சர்வோதயத்தலைவரான திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் காஷ்மீர் பிரதமர் திரு சாதிக்கை இங்கு சந்தித்துப் பேசினர்.

இரு தலைவர்களும் காஷ்மீர் பிரச்னையை விவாதித்ததாகக் கூறப்பட்டது.

வரி விளம்பரம்

வைத்தியம்

ஆண்மைக்குறைவு தாம்புத்தளர்ச்சி, சர்ம வியாதிகள் பற்றிய இலவச ஆலோசனைகள் அளிக்கப்படுகின்றன. விபரங்களுக்கு 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். டாக்டர் M. துரைசிங்கம் சிவபாரதி வைத்திய நிலையம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 258

கல்வி

மார்கழி க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு ரசாயனம், பௌதிகம், தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்தர கணிதம், சரித்திரம், குடியியல், புவியியல், எண்கணிதம், ஆங்கிலம், சிங்களம், வர்த்தக பாடங்கள் மாலை 4—8 மணி வரை பட்டதாரிகளாலும், இளைப்பாறிய கல்லூரி அதிபர்களாலும் நடாத்தப்படுகின்றன. பார்வையிட்டு சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 255

விற்பனைக்கு

காணி

நாவலர்வீதி - அச்சேரி நல்லூர் வீதிச்சந்திக்கு அருகாமையில் ஒழுங்கைச் வீதியில் இரண்டு பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ந. நாகேந்திரம், பிரான் சலவைத் தொழிற்சாலை. 222, நவலர் வீதி, யாழ்ப்பாணம். 140

## மூன்று ஐரோப்பிய வெளியுறவு மந்திரிகள்

### ஜோன்சனை சந்திப்பர்

வாஷிங்டன், அக். 11

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் பிரிட்டிஷ், பிரெஞ்சு, இத்தாலிய வெளியுறவு மந்திரிகளைத் தனித்தனியே இன்று சந்தித்துப் பேசவிருக்கிறார்.

இந்த மூன்று நாட்டு வெளியுறவு மந்திரிகளும், ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் வந்தவர்களாவர்.

திரு. ஜோன்ஸனைச் சந்திக்கு முகமாக இம்மூன்று மந்திரிகளும் இன்று வாஷிங்டன் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

திரு. ஜோன்ஸனும், இம்மூன்று வெளியுறவு மந்திரிகளும் செக். நிலைமை, மற்றும் பொதுவாக ஐரோப்பிய உலக நிலைமைகளை ஆராய்வர்.

விலை குறைந்தன! விலை குறைந்தன!!

நீர்வேலி
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கத்தினரால்
தயாரிக்கப்பெற்ற
★ பூட்டுகள் ★ பூட்டுப் பிணைச்சல்கள்
★ கேற்றுகள் ★ கிறில் வகைகள்
வெளிநாட்டில் தயாரிக்கப்பெற்றதும்
இலங்கை உலோகப்பொருள் கூட்டுத்தாபனத்தாரால்
தயாரிக்கப்பெற்றதுமான
முள்ளுக் கம்பிகள்
'தேதை மார்க்' 'யானை மார்க்'
வாள்கள் அஸ்பெஸ்டஸ் சீற்றுகள்
தொழிலாளர்களுக்கு தேவையான எல்லாவித ஆயுத வகைகளும்
மற்றும்
உங்களுக்குத் தேவையான எல்லாவிதமான
இரும்புச் சாமான்களும்
மிகவும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
"ஸ்டீல்சன்ஸ்"
287 - 289, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.
போன்: 7035

RAJAH
JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
pre-poya, poya. at 10-30 a. m.
Beautiful Girls daring acts
This Crazy, Crazy World
/Strictly for adults/

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7&9-45p.m.
Poya&PrePoya at 10-30 a m.
TRAP FOR 7 SPIES
Spy film
/Color/

ராணி
/யாழ்ப்பாணம்/
தினசரி 2-30, 6-30 மணி
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
பெண் என்றால் பெண்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30
சிவாஜி-ஜெமினி
சாவித்திரி
நடித்த
கந்தன் கருணை

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30
பாயா தினங்களில் 2-30
சிவாஜிஜெமினி, சாவித்திரி
நடித்த
பாசமலர்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் பிளாஸா மைலன்
வெலிங்டன் விஜயா
(யாழ்ப்பாணம்) (சுட்டுநகர்)
மற்றும் திரைகளில்
★ எம். ஜி. ராமச்சந்திரன்
★ சரோஜாதேவி
அசோகன், நம்பியார், சந்திரகாந்தா
இன்னும் பலர் நடித்த
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பறக்கும் பாவை
/ஈஸ்ட்மென் கலர்/
இசை டைரக்ஷன்
விஸ்வநாதன் ராமண்ணா

77-வது தினம்
லிடோ ராஜ்
(கொழும்பு) (நீர்கொழும்பு)
★ ராஜ்கபூர்
★ வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக்கலர்)

எதைக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்வர் சிலர்
"இதுதான் வேண்டும்"
என்று குறிப்பிட்டுக்கேட்பர் சிலர்
★ அழகு ★ உழைப்பு
★ நவீன மோஸ்தர்
விரும்பும் அனைவரும் குறிப்பிட்டுக் கேட்பது
"லதா சேட்ஸ்"
தரத்தில் உயர்ந்தவை
LATHA
விலையில் மலிந்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எனது வாழ்க்கைத் தத்துவத்தில், நோக்கம் அதை அடைவதற்கான வழி முறையாகவும், வழி முறை நோக்கமாகவும், பரஸ்பரம் மாற்றக்கூடியவையாகும்,

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

(திருவள்ளுவர் வேளாண்மையாண்டு புரட்டாசி மாதம் 26-ந் திகதி 12-10-68)

## மக்களின் பிரதிநிதிகள்

மக்கள் பிரதிநிதிகள் சபை நேற்றுக்காலை கூடியதும் இரண்டு நிமிஷங்கள் சபைக்கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டியதில் ஏற்பட்டதையிட்டு யாருக்கும் சமயமாக மகிழ்ச்சி அடைய முடியாது. சபைக்கூட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய அங்கத்தவர்கள் சபையில் சமுகமளிக்காததால் சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்படுவது இது முதல் தடவையல்ல. சென்ற இரண்டு தினங்களுக்குள்ளேயே சபை இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட நேர்ந்திருக்கிறது. மக்களின் பிரச்சினைகளுக்குமேல் பிரச்சினைகள் தோன்றி அவர்களுக்குப் பல தொல்லைகள் சூழ்ந்துள்ள இச்சமயத்தில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகமக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்கள் கடமையில் அசிரத்தை காண்பிப்பது மக்களுக்கு மட்டுமல்ல பிரதிநிதிகள் தாங்களே தங்களுக்குச் செய்யும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

மக்களின் பிரச்சினைகளை ஆட்சிமன்றத்தில் எடுத்துக்கூறி அவற்றுக்கு நிவாரணம் தேடுவதற்கு முயற்சிசெய்வது மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமை. ஒவ்வொரு நாளும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. இவற்றை அமைச்சர்களின் கவனத்துக்குக்கொண்டு வரவேண்டியதும் அவற்றுக்குத் தீர்வுகாணவேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் எடுத்துக்காட்ட வேண்டியதும் மக்கள் பிரதிநிதிகளின் கடமையும் பொறுப்புமாகும்.

தங்களுக்கு அதிக வசதிகள் செய்துதரப்பட வேண்டுமென்றும், தங்களுக்கு அளிக்கப்படும் மாதச் 'சம்பளம்' போதாதென்றும் அதை அதிகரிக்க வேண்டுமென்றும் கோரிக்கைவிடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் தங்கள் உரிமைகளுக்காக கோரிக்கை விடுக்கும்போது தங்கள் கடமைகளையும் சரிவரச் செய்யவேண்டுமென்பதை உணராததை வெளிப்படுத்துவதாகும்.

மக்கள் பிரதிநிதிகள் சபையின் கூட்டங்களுக்கு வருவதிலும் அங்கு நடந்துகொள்ளும் முறைகளும் மட்டுமல்லாது அவர்களது நடத்தையில் தான் நாட்டு மக்களின் நடத்தையும் தங்கியிருக்கிறது என்பதை உணரவேண்டும். மக்களின் பிரதிநிதிகள் மக்களுக்கு வழிகாட்டும் முறையில் இனிமேலாவது நடந்துகொள்வார்களென எதிர்பார்ப்போம்.

அரசாங்கம் ஒரு கோட்டை: அதை

# "எதிரிகளுடன்சேர்ந்துநாம்தாக்க வேண்டியதில்லை"

## ஆட்சிமன்றத்தில் சாவகச்சேரி எம். பி

கொழும்பு, வெள்ளி

அரசாங்கம் ஒருகோட்டையைப் போன்றது. அந்தக் கோட்டையில் பலஹீனங்கள் பல இருக்கின்றன. இந்தப் பலஹீனமான இடங்களில்தான் எதிர்க்கட்சியினர் தாக்குகின்றனர். கோட்டையின் பலஹீனமான இடங்களில் எதிரிகள் தாக்கும்போது அதே இடங்களில் நாமும் தாக்குவதற்கு விரும்பவில்லை. இதனால் தான் கோட்டையைப் போன்ற அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம்',

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதிநிதியும் தமிழரசுக் கட்சி ஆட்சிமன்றக்குழுவின் பிரதம கொறடாவுமான திரு. வி. என். நவரத்தினம் நேற்று காலை மக்கள் பிரதிநிதிகள் சபையில்கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லமீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

"அரசாங்கத்தை தாக்கி அதை வீழ்த்துவதற்கு நாம் இப்போது விரும்பவில்லை" என்றும் திரு. வி. என். நவரத்தினம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் முன்னைய அரசாங்கத்தின் கொள்கையைப் பின்பற்றும் சிலர் தொடர்ந்திருந்து வந்தனர். இவர்களில் ஒருவர் இந்நாட்டைவிட்டு வெளியே சென்று வேறு உத்தியோகம் பார்க்க சென்றிருக்கிறார்கள். இவர்கள்தான் கல்வி அமைச்சரைத் தவறான வழியில் செலுத்தியிருக்கிறார்கள். கல்வி அமைச்சர் இலட்சமகுமிகளில் குழந்தைப்பிள்ளைத் தனமாகப் பேசுவது மட்டுமல்லகுழந்தைத்தனமாக — சிறுபிள்ளைத்தனமாகவும்நடந்துகொள்கிறார். கல்வி அமைச்சர் தமது கல்வி வெள்ளை அறிக்கையில் தெரிவித்திருந்த சில யோசனைகளை மசோதா நிறைவேறு முன்னரே நிர்வாக ரீதியில் அமுல் செய்வதை ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் குந்தகமான அம்சங்களடங்கிய அந்த யோசனைகளை அமுல்நடத்துவதை அவர் கைவிடுவாரென நம்புகிறேன் என்றும் திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

## 'உலகின் பெருமகான்'

யாழ்ப்பாணம், சனி

'காந்திஜீ உலகத்தின் தனிப்பெரும் மகான். காந்தியக் கொள்கைகளை உலகம் கடைப்பிடித்தொழுகினால் உலகமே சொர்க்கமாகிவிடும்'

இவ்வாறு காந்திஜீ நூற்றாண்டுவிழாவை யொட்டி கொழும்புத்துறை புனித வளனார் சாதனா பாடசாலையினர் நடத்திய கூட்டத்துக்கு கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. எஸ். சிவலிங்கம் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.

மௌனவணக்கத்துடனும் மகாத்மாவின் உருவப்படத் திரைநீக்கத்துடனும் விழா ஆரம்பமாகியது.

கவிஞர் இ. நாகராஜன், வித்துவான் ம. ச. அந்தோனிப்பிள்ளை, ஆசிரியர் ம. விக்டர், வித்துவான் ச. இ. ஞானப்பிரகாசம், ஆசிரியர் பொன்னுச்சாமி, ஆசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

இவ்விழாவில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர்களும், மாணவர்களும், பாஷையூர் அர்ச். அந்தோனியார் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

கொழும்புத்துறை சாதனா கலாசாலை மாணவர்கள் வரவேற்புக்கீதம் இசைத்தனர் அர்ச். அந்தோனியார் பாடசாலை மாணவர்கள் நடனவிருந்தளித்தனர்.

ஆசிரியர் ஆ. மார்டின் நன்றிகூறினார்.

## தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி உறுப்பினர்

அளவெட்டி, வெள்ளி

தெல்லிப்பழையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர்: திரு. செ. சித்திரானந்தன், உபதலைவர்கள்: திருவாளர்கள் செ. சிவநாதன், க. திருநாவுக்கரசு, செயலாளர்: திரு. யோ. சிவலிங்கம், உபசெயலாளர்: திரு. க. சண்முகநாதன், பொருளாளர்: திரு. வ. சிவலிங்கநாதன்.

9 பேர் கொண்ட நிர்வாகசபை கொண்டும் தெரிவு செய்யப்பட்டது.

# தமிழ்ப் பிரதேசத்தில் புதிய பல்கலைக்கழகம்

கொழும்பு, வெள்ளி

வடக்கில் அல்லது கிழக்கில் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் நிறுவப்படும் இது சம்பந்தமான வாக்குறுதியை அரசாங்கம் தமிழரசுக் கட்சிக்கு கொடுத்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

கல்வி மந்திரிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது அரசாங்கத்தைத் தமிழரசுக் கட்சிமுடிவு செய்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.

தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் இராமநாதன் பல்கலைக்கழகம் அமைக்கும்படி கேட்டுவருகின்றனர். தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப்பல்கலைக்கழகம் கேட்டுவருகின்றனர். இவர்கள் இருசாராருக்கும் இடையிலான தகராறில் அரசாங்கம் மாட்டிக்கொள்ளாமல் தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கமட்டும் வாக்குறுதியளித்துள்ளதாம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமாக தம்மை ஆதரித்ததால் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைத்துத்தருவதாகத் தமிழரசுக் கட்சியினருடன் தாம பேரம் பேசவில்லையென்று கல்வி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## முல்லைத்தீவு பட்டினசபை தேர்தல்

முல்லைத்தீவு, வெள்ளி

ஐந்து வட்டாரங்களைக் கொண்ட முல்லைத்தீவுப் பட்டினசபையின் தேர்தல் இந்தவருடம் டிசம்பரில் நடைபெறவிருக்கிறது. இதற்கான நியமனப் பத்திரங்களை அபேட்சகர்களிடமிருந்து இம்மாதம் 26ம் திகதி வவுனியா உதவி தேர்தல் உத்தியோகஸ்தர் திரு. எஸ் கந்தசாமி ஏற்றுக் கொள்வார்.

## சிமெந்து தட்டுப்பாடு

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியிலுள்ள பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படும் சிமெந்து கோட்டாக்கள் குறைக்கப்பட்டதனால் சிமெந்துக்கு இங்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கட்டடம் கட்டுபவர்கள் கள்ளச்சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

வியட்நாமில்

## அமெரிக்க குண்டு வீச்சு

### தாய்லாந்து கருத்து

நியூயோர்க், அக். 11

வடவியட்நாம் மீதான குண்டு வீச்சை அமெரிக்கா நிபந்தனையின்றி நிறுத்தினால், அது வடவியட்நாமுக்கு மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபடும் தூண்டுதலை அளிக்கலாம் எனத் தாய்லாந்து வெளியுறவு மந்திரி திரு. கோமான் ஐ. நா. பொதுச்சபையில் பேசுகையில் நேற்றுக் குறிப்பிட்டார்.

ஐ. நா. சபையின் குறைபாடுகள் பற்றியும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். பல சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு ஆக்கிரமிப்பையோ அல்லது உள்நாட்டு ஆக்கிரமிப்பையோ தடுத்து நிறுத்தச் சக்தியற்று ஐ. நா. சபை இருந்திருப்பதாக அவர் கூறினார்.

சீனாவின் ஆதிக்கத்திலுள்ள திபேத்தில் அந்நாட்டு மக்கள் சீன அதிகாரிகளின் கொடுமைப் [illegible] தாய்லாந்து வெளியுறவு மந்திரி [illegible] தெரிவித்தார்.

## நாட்டிலும் நகரிலும்

தங்களைப் பற்றி இனிய வார்த்தை கேட்பதை யார் தான் விரும்பமாட்டார்கள்? முகஸ்துதியல்ல, முகமல்ல. உள்ளமார நெஞ்சில் எழுந்த உணர்ச்சிப் பெருக்கால் வெளிப்படும் வார்த்தை.

யாழ்ப்பாணத்தில் பெரிய கடைகளைச் சுற்றிச் சிலர் சுவீப் டிக்கட் விற்பனை செய்வதைக் கண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மோட்டார் வண்டிகளிலிருந்துகொண்டு அந்தக் காலத்து நாடக மேடைக் கிரீடாக்குமிடுகளைப் போல கீச்சிட்ட குரலில் பேசும் ஆண்களைப் பற்றி நான் கூறவில்லை!

கைகளால் சுழற்றும் சைக்கிள் வண்டிகளில் இருந்துகொண்டு டிக்கட் விற்கிறார்களே, அவர்களைத் தான் குறிப்பிடுகிறேன்.

நேற்று இவர்களில் ஒருவருடன் பேச்சுக்கொடுத்த போதுதான் காதுக்குத் தேன் விட்டதுபோலச் சில இனிய வார்த்தைகளைக் கேட்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

இவர் ஓர் இலங்கைச் சோனகர், கண்டிப் பகுதியில் பிறந்து வளர்ந்தவர். கார் விபத்து ஒன்றில் அகப்பட்டு, இரண்டு கால்களையும் இழந்தவர். வேறு தொழில் செய்ய வசதியில்லாமையினால் இப்படி ஒரு பிழைக்கும் வழியைக் கண்டிருக்கிறார்.

"அது சரி, கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட நீங்கள் யாழ்ப்பாணத்துக்கு எப்படி வர நேர்ந்தது? கண்டியில் இருந்து கொண்டே இப்படி ஒரு வழியைப் பார்த்திருக்கலாமே?" என்று அவரைக் கேட்டேன்.

அவர் அதற்குச் சொன்ன மறுமொழி என்னைச் சற்றே முட்டாளாக்கிவிட்டது. அவர் சொன்னார்:

"கண்டிப்பகுதியின் நிலப்பரப்பு உங்களுக்குத் தெரியுமோ என்னவோ? அங்கு மலைநாடாகையால் மேடு பள்ளங்கள் அதிகம். யாழ்ப்பாணம் அப்படியல்ல. இது சமபூமி. இந்தச் சைக்கிளில் பிரயாணஞ்செய்வது இந்நாட்டில் சுலபம்" என்றார்.

நானும் இலேசாக விட்டுவிடவில்லை. "யாழ்ப்பாணம் மட்டுந்தானா சம பூமி? கொழும்பிலிருந்தால் வியாபாரம் இன்னும் அதிகமாயிருக்குமே?" என்றேன்.

அதற்கு அவர் சொன்னதாவது: "ஆம் உண்மைதான். ஆனால் கொழும்பில் நம்பிக்கையாக இப்படி ஒரு தொழிலை நடத்த முடியாது. அங்கே திருடர்களும், காவாலி கடைப்புலிகளும் அநேகர் இருக்கிறார்கள். முடிச்சுமாறிகளும் உலாவுகிறார்கள். கொழும்பில் இத்தொழிலை நடாத்தினால் ஒன்றில் பணம் பறிபோகும். இல்லாவிட்டால் சுவீப் டிக்கட்டுகளையாவது பறித்துக் கொண்டு ஓடிவிடுவார்கள். கால் முடமாயிருக்கும் நான் அவர்களை கலைத்துப் பிடிக்க முடியுமா? யாழ்ப்பாணத்தில் எனக்கு அந்தத் தொந்தரவு ஒன்றும் கிடையாது. இங்குள்ளவர்கள் அந்தப் படிக்கு யோக்கியவான்கள்."

யாழ்ப்பாணத்தவர்கள் சுயநலமிகள், கஞ்சர்கள் என்றெல்லாம் அபசார வார்த்தைகளைக் கேட்ட இச்செவிகளுக்கு மேற்படி அன்பரின் சொற்கள் அமுதம்போலிருந்தன.

பண்ணைத்துறைக்குப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய வீட்டில் இவரைப் போல இன்னும் பல அன்பர்கள் இருந்துவருகிறார்கள்.

[4ம் கலம் பார்க்க]

[5ம் கலத் தொடர்ச்சி]

டிக்கட் விற்கும் நேரம் போகக் கடை பின்னால் போன்ற சிறு கைத்தொழில்களையும் செய்து இவர்கள் வருமானம் பெறுகிறார்கள். வீட்டில் ஒருவரை வேலைக்கு அமர்த்திச் சமையல்செய்து சாப்பிடுகிறார்கள். சமூக சேவைப்பகுதி இவர்களுக்கு ஒரு சிறு 'அலவன்ஸ்' கொடுத்தபோதிலும் அது அவர்களுக்குப் போதாது.

யாழ்ப்பாணத்திலுள்ள பெருமக்கள் சிலரும் இவர்களுக்கு உதவியளிக்கிறார்கள். சுவீப் டிக்கட் விற்பனை மூலமாகவும் இவர்களுக்குக் கொமிஷன் கிடைக்கிறது. ஆனால் அதுவும் எம்மாத்திரம்?

கடைக்குக் கடை, மூலைக்கு மூலை விற்பனையாகும் சுவீப் டிக்கட்டுகளை அங்கம் குறைந்த இந்தத் துர்ப்பாக்கியவான்களுக்கு ஏகபோக விற்பனை உரிமையாக்கினால் என்ன? என்று என் மனம் சிந்தித்தது.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வடபகுதியில் போலவே மலையகத்திலும் சேவைசெய்க"

## தமிழ் ஆசிரியர்களுக்கு உபசபாநாயகர் அறிவுரை

நாவலப்பிட்டி, வெள்ளி

'தரம்பெற்ற பிள்ளைகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் பெரும் பொறுப்பு பெற்றோர்களிடமே இருப்பதால், கல்வி விஷயத்தில் அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட வேண்டும். நான் மலையக மக்கள் மீது அனுதாபம் கொண்டவன். வடபகுதி ஆசிரியர்கள் அப்பகுதியில் கல்வி வளர்ச்சிக்கு சேவை செய்ததுபோல் மலையகப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் உதவமுன் வந்தால் அது தமிழ் மொழிக்குச் செய்யும் பெருந் தொண்டாய் அமையும்'

இவ்வாறு மக்கள் பிரதிநிதிகள் சபை உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலய பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். திரு. க. ஆனந்தக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற விழாவை இப்பகுதி எம். பி. திரு. சந்திரா கருணாரத்ன குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசியதாவது:-

இலங்கை மக்கள் இலவசக் கல்வி, இலவச அரிசி, சுகாதார வசதிகளுடன் சுபீட்சமுடன் வாழ காரணகர்த்தாக்கள் மலைநாட்டுத் தொழிலாளர்களே. பிறரின் நலனுக்கு தம்மை தியாகஞ்செய்யும் இம்மக்களின் குழந்தைகளுக்கு தக்க கல்வி வசதிகள் மறுக்கப்படுவது உலகம் காணாத அநீதிச் செயலாகும். தாய்மொழிக் கல்வியே குழந்தையின் பூரணக் கல்வி வளர்ச்சிக்கு அனுகூலமானது என்பது உலகநாடுகள் ஒப்புக்கொண்ட விஷயம். இலங்கையைப் பொறுத்தமட்டில் குறுகிய நோக்கத்துடன் போதனா மொழியைத் தெரிவு செய்யும் பொறுப்பைப் பெற்றோர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகிறது அரசாங்கம். அரசாங்கத்தின் முடிவு எப்படியாயினும் மலைநாட்டுத் தமிழ்ப் பெற்றோர்கள் மிக விழிப்புணர்வோடு சிந்தித்து தம் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியே போதனா மொழியாயிருக்க வேண்டும் எனச் சங்கற்பப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வரும்போதும் நேரத்தில் அதன் நன்மை நிலைகளை அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

மற்றும் திரு. அ. இராஜகோபால், திரு. டேவிட் பெரேரா, திரு. நா. முத்தையா ஆகியோர் உரை வழங்கினர். மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

## சரவணை நாகேஸ்வரி பெற்றோர் ஆசிரியர் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையின் தரத்தை உயர்த்தி உயர்தரக் கல்வி பெற வசதி செய்ய வேண்டுமென கல்விப் பகுதியினரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்றை பிரஸ்தாப பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

வித்துவான் இ. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வித்தியாசாலைக்கென நிரந்தர கட்டிடம் ஒன்றை அமைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலையின் 1969-ம் ஆண்டுத் தொடக்கத்தில் ஆறும் வகுப்பில் 75 மாணவரும் முதலாம் வகுப்பில் 40 மாணவரும் படிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவிருப்பதால், தற்காலிகமாகக் கட்டிடம் ஒன்றை நிறுவுதல் அவசியமெனப் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக பொதுமக்களிடமிருந்து நிதி உதவி பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

## 'கொடுமையை ஒடுக்கியவர்'

அக்கரைப்பிட்டி, விசா.

'இன்று வட பகுதியில் சாதிக்கொடுமை தலைதூக்கியுள்ளது அதைப்போலவே அன்றும் அமெரிக்காவில் இதைவிடப் பன்மடங்கு சாதிக்கொடுமை இருந்து வந்தது. வெளிநாட்டிலிருந்து அங்குவரும் இந்திய இனமை மக்களை வெள்ளையர்கள் உதாசீனம் செய்தார்கள். இக் கொடுமையிலிருந்தும் அன்னை சாந்தி எம்மை விடுதலை செய்தார். இவரால்தான் நாம் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இப்படிப்பட்ட ஒரு உத்தமரை நாங்கள் நினைவு கூருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.''

மேற்கண்டவாறு நாவற்குளி இந்துக் கல்லூரி அதிபர் திரு எஸ். சந்தையா வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்ற காந்தி நூற்றாண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு மத்திய கல்லூரி அதிபர் திரு ஜே. அம்பரத்தினம் தலைமை வகித்தார். காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் திரு வே. இளையதம்பி, பண்டிதர் பஞ்சாட்சரம் ஆகியோரும் உரையாற்றினர்.

தலவாக்கொல்லையில்

## இ. தொ. கா. வாலிபர் விழா

தலவாக்கொல்லை, வெள்ளி

தலவாக்கொல்லை மாநில வாலிப காங்கிரஸ் விழா கார்த்திகை மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் நடைபெறும். மலையகத் தொழிலாளர்கள் கலை நிகழ்ச்சி முதல்நாள் இடம்பெறும். மறுநாள் விளையாட்டுப் போட்டியும் ஊர்வலங்களும் நடைபெறும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எம். பிக்கள் செனட்டர்களுடன் ஐ. ஜி. பி.யையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

விழா ஒழுங்குகளை வாலிப காங்கிரஸ் தலைவர் திரு. கோ நடேசபிள்ளையும் கல்வி இலக்குவர் திரு. எஸ். செல்லையாவும் நேரடியாக கவனிப்பதுடன் அண்மையில் பத்தனை — அக்கரப்பத்தனை-தலவாக்கொல்லை நாகசேனை பகுதியில் உள்ள மாதர் காங்கிரஸ் வாலிப காங்கிரஸ் கோட்டக்கமிட்டி தலைவர்களையும் அழைத்துப்பேசினர்.

## சேவைக்கு பொன்னாடை

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் கடமையாற்றி ஓய்வு பெறும் பண்டிதர் க. இராசையாவின் சேவையைப் பாராட்டுமுகமாக கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை மண்டபத்தில் அதிபர் திரு. சி. வில்வலிங்கம் தலைமையில் பிரிவுபசார வைபவமொன்று வரும் 19 ம் தேதி நடைபெறவிருக்கிறது. முன்னாள் சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. ... பண்டிதருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பர்.

## ஒப்பாரி வைத்துக்கொண்டு வீதிவழியாக இழுத்துப்போனார்கள்

சுழிபுரம், வெள்ளி

மேளம் முழங்க, பெண்கள் வீதிவழியாக ஒப்பாரி வைத்து அழ, அந்த அக்கிரமக்காரனை தெருக்கள் வழியாக இழுத்துவந்து நகரின் எல்லையில் நிறுத்திவிட்டு கொளுத்தி தகனம் செய்தார்கள்.

இந்தச் சம்பவம் சுழிபுரம் பகுதியில் நடைபெற்றது. பலநாட்கள் மழை இல்லாததால் இக்கொடும்பாவியை சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த வாலிபர்கள் இழுத்துக்கொண்டுபோய் எரித்தார்கள். பெண் உடுப்பு போட்டுக்கொண்டு இவர்கள் வீதிகளில் ஒப்பாரிவைத்து அழுதனர்.

# வீடமைப்பு திட்ட வீடுகளின் அவலநிலை

நல்லூர், வெள்ளி

யாழ். நெக்கிளஸ் வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகள் பல வருடங்களாக பழுது பார்க்கப் படாதிருப்பதால் இத்திட்ட வீடுகள் பலவற்றின் சுவர்கள் இடிந்தும் ஓடுகள் உடைந்தும் இருக்கின்றன. கதவுகளின் பிணைச்சல்கள் ஜன்னல்கள் ஆகியவையெல்லாம் பழுதாகியுள்ளன. இதனால் இந்த வீடமைப்புத்திட்டத்தில் வசித்து வருபவர்கள் சொல்லொணாக் கஷ்டத்துக்குள்ளாகி வருகிறார்கள்.

இந்த வீடுகளுக்கு அருகாமையிலுள்ள மலசலகூடங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. இதன் காரணமாக தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் இங்கு ஏற்பட்டுள்ளது. இந்த வீடமைப்புத் திட்ட வாசிகளின் பாவிப்புக்கென அமைக்கப்பட்டிருக்கும் வீதிகள் மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன.

மழை காலம் வந்துள்ளதால் இவை உடனடியாக சீர்படுத்தப்படாவிடில் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்தை ... யிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லிவர்பூலில் குதிரைகள்: இங்கு பந்தயம்?

## குற்றத்தை நிரூபிக்கவில்லை: எதிரிகள் விடுதலை

கண்டி, வெள்ளி

லிவர்பூலில் ஓடிய குதிரைகள் மீது இங்கு பந்தயம்பிடித்தார்களாம். ஆனால் குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரிகள் விடுதலையானார்கள்.

''குறிப்பிட்ட தினத்தன்று இங்கிலாந்தில் 'லிவர்பூல்' என்னுமிடத்தில் குதிரைப் பந்தயம் நடைபெற்றதென்பதையும், அதில் பந்தயம் செலுத்தப்பட்ட குறிப்பிட்ட குதிரைகள் ஓடின என்பதையும் பொலிசார் நிரூபிக்க தவறியமையால் எதிரிகளை விடுதலை செய்கின்றேன்'' என சட்டவிரோதமாக்கப்பட்டுள்ள குதிரை பந்தய வழக்கொன்றில் எதிரிகள் ஐவரை விடுதலை செய்த கண்டி மாஜிஸ்திரேட் திரு. டி. க. தர்மசேகரா தமது தீர்ப்பில் கூறினார்.

கண்டி திருக்கோணமலை வீதியைச் சேர்ந்த ஐவர் கடந்த ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்தில் "லிவர்பூல்" என்னுமிடத்தில் ஓடிய குதிரைப் பந்தயமொன்றில் குதிரைகள் மீது பந்தயம் எடுத்தார்கள் என்றும் இலங்கைக்குள் குதிரைப்பந்தயங்கள் மீது, பந்தயங்கள் எடுப்பதும், பந்தயம் பிடிப்பதும் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளது எனவும், கண்டி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. வி. ஹரல் கமனி ஆல் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

கடந்த ஒரு வருட காலமாக நடைபெற்ற இவ்வழக்கில், எதிரிகளை விடுதலை செய்த மாஜிஸ்திரேட், சோதனையின் போது எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை அவர்களுக்கு திருப்பி அளிக்கும்படியும் உத்தரவிட்டார்.

## வெளிநாலாவுக்கு இந்திரா வந்தார்

கராக்கஸ், அக். 11

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கொலம்பியாவிலிருந்து இன்று காலை வெனிசூலாத் தலைநகரான கராக்கஸ் வந்து சேர்ந்தார்.

அவரை விமானநிலையத்தில் வரவேற்க வெனிசூலா ஜனாதிபதி, மந்திரிகள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் வந்திருந்தனர். சுமார் 2,000 மக்கள் விமான நிலையத்தில் குழுமியிருந்தனர்.

திருமதி இந்திராகாந்தியைக் கௌரவிக்குமுகமாக 21 குண்டுகள் வெடிக்கப் பட்டன.

இந்தியப் பிரதமரை வரவேற்றுப் பேசிய வெனிசூலா ஜனாதிபதி, 'மக்களின் நலனை அபிவிருத்தி செய்ய பெரிதும் உழைத்து வருபவர் திருமதி இந்திரா காந்தி' எனப் பாராட்டினார்.

திருமதி இந்திராகாந்தி நன்றி தெரிவித்துப் பேசுகையில், சக்திமிக்க ஜனநாயகத்தைக் கொண்ட நாடொன்றுக்கு விஜயம் செய்வதில் தான் பெருமைப் படுவதாகக் கூறினார்.

இந்தியப் பிரதமர் இன்று பிற்பகல் டிரினிடாட் செல்லவிருக்கிறார்.

## வவுனியா எம். பி. நடவடிக்கை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி காரணமாக ஒரு நிர்வாகக் காரியாலயத்தைக் கட்டித்தர வேண்டுமென வவுனியா எம். பி. திரு. த. சிவசிதம்பரம் சுகாதார அமைச்சரைக் கேட்டதற்கிணங்க ரூபா ஒன்றரைலட்சத்தில் ஓர் நிர்வாகக் காரியாலயத்துக்கு ஒதுக்கீட்டுவதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்து சென்ற வருடம் நவம்பர் மாதம் அப்போது சுகாதார அமைச்சராகவிருந்த திரு. எம். டீ. எச். ஜெயவர்த்தனாவால் அத்திபாரக்கல் நாட்டப்பட்டது. இதுவரை கட்டிடவேலைகள் தொடங்காததால் சிவசிதம்பரம் தற்போதைய சுகாதார அமைச்சரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி காரியாலயக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சைக்கிள் திருட்டு

பருத்தித்துறை, வெள்ளி

கரவெட்டிப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் மனைவி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் ஒருவரின் சைக்கிள் பட்டப்பகலில் திருடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி பருத்தித்துறைப் பொலிசார்புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## வேலணையில் நெசவுநிலையம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

வேலணை மேற்கு ஆறாம் வட்டாரத்தில் சங்கத்தார் மேணி வயிரவர்கோவிலுக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள நெசவு நிலையம், இவ்வார முடிவுக்குள் திறந்து வைக்கப்படும்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் நடைபெறும் திறப்புவிழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா நெசவுநிலையத்தைத் திறந்து வைக்கவிருக்கிறார். தீவுப் பகுதி காரியாதிகாரி திரு. விஜயலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## ஜெர்மனி செல்கிறார்

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வேலைத்தல அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியம் இம்மாதஇறுதியில் ஜெர்மனிசெல்லவிருக்கிறார். இவர் மூன்று மாதம் அங்கு தங்கியிருப்பார்.

உபகாரச்சம்பளம் பெற்று இத்துறையில் பயிற்சி பெற இவர் அங்கு செல்கிறார். இவரது இடத்திற்கு தற்காலிகமாகபிரதம எஞ்ஜினியர் திரு. பிரசன்சில் கடமையாற்றுவார்.

## கல்லுண்டாய் உப்பள உற்பத்தி

அராலி, வெள்ளி

கல்லுண்டாய் உப்பளத்தில் அடுத்த ஆண்டும் 2000 தொன் உப்பு மட்டுமே விளைவிக்க முடியுமென்றும் இதற்கு 58,570 ரூபா தேவைப்படுமெனவும் உப்பள தொழில் நுட்ப முகாமையாளர் வவி. மேற்கு பலநோக்குக் கூட்டுறவுசமாசத்திற்கு அறிவித்துள்ளார்.

ஒரு தொன் உப்பு விளைவிக்க சராசரி 29 ரூபா செலவாகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியமணிகளே!

உங்களிடமிருந்து தினம் மலைமலையாக வந்து குவியும் கடிதங்கள் உங்களின் உற்சாகத்தை எமக்கு உணர்த்துகின்றன. தொடர்ந்து எழுதுங்கள் தொடர்ந்து படியுங்கள்!

பரிசுப் போட்டி- 3 க்கான காந்திகட்டுரைப் போட்டியின் முடிவு இம்மலரில் வெளியாகியுள்ளது. ஒரு கட்டுரையே பரிசுக்குத் தகுதியாய்த்ததாக உள்ளதால், ஒருவருக்கே பரிசுவழங்க தீர்மானித்துள்ளோம். பரிசு பெறும் மாணவருக்கு எமது உள்ளங்கனிந்த வாழ்த்துகள்!

ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவுவிழாவையொட்டி ஈழநாடு நடத்தும் ஆயிரக்கணக்கான ரூபாய் பரிசுத் திட்டப் போட்டியில் மாணவர்களுக்கென்றும் கட்டுரைப் போட்டி ஒதுக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இம்மலரில் விபரம் வெளியாகியுள்ளது. நீங்களும் கலந்துகொண்டு பரிசுகளைப் பெறலாமே!

—மாமா

## பரிசுப் போட்டி-3

"மனித குலத்திற்கு மகாத்மாவின் சேவை" கட்டுரைப் போட்டியில் முதற் பரிசான 15 ரூபாயைப் பெறுபவர் இவர்தான்.

**கி. ஜேம்ஸ் கூஞ்சு**

ஆர்ச். மடுத்தினார் குருமடம். யாழ்ப்பாணம்.

பாவம் எதுவும் செய்யாமல் உண்மையை விட்டுப்பிறழாமல், என்னைப் பேச்சு செயல்முன்றிலும் பழுதற்ற அகிம்சையைக் கடைப்பிடித்து நடக்க ஆசைப்படுகிறேன்.

—காந்தியடிகள்




## மாணவர் கட்டுரைப் போட்டி

மாணவர்களுக்கென 'ஈழநாடு' தனது 10வது ஆண்டு நிறைவு விழாவையொட்டிப் போட்டி ஒன்றை நடாத்துகின்றதல்லவா? அதில் இலங்கை அடிப்படையில், மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு எனப் பிரிக்கப்பட்டு இந்தப் போட்டி நடத்தப்படுகின்றது. மேற்பிரிவுப் போட்டியில் 22 வயதுக்குட்பட்ட மாணவர்களும், கீழ்ப்பிரிவுப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட மாணவர்களும் பங்கு பற்றலாம்.

**கட்டுரைக்கான தலைப்புகள்**

மேற்பிரிவு: காந்தியும், பத்திரிகையும்.
கீழ்ப்பிரிவு: காலத்தின் கண்ணாடி.
போட்டி முடிவுத் திகதி: 15-11-68

'ஈழநாடு' பத்திரிகையில் வேறு பக்கத்தில் வெளியாகியுள்ள கூப்பனையும் கத்தரித்து, நிரப்பி கட்டுரையுடன் அனுப்ப தவறக்கூடாது. கட்டுரைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி: மாணவர் கட்டுரைப் போட்டி, 'ஈழநாடு', த. பெ. இல: 49. யாழ்ப்பாணம்.

★ தொடர் நவீனம்

# ராஜா வீட்டு பிள்ளை

மாமா ராஜகோபால்

விதையைத்துத் துடிதுடித்துக் கொண்டிருந்தார் சுந்தரேசனார்!

இதுவரை நேரமும் தன் கரம்பற்றிக்கொண்டிருந்த அருமை மகன் ரவியைக் காணவில்லையென்றால் —

அவருக்கு எப்படியிருக்கும்?

அடுத்து என்ன செய்வதென்று யோசிக்கக்கூட அவரால் முடியவில்லை!

திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியை அவர் இதயத்தால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

தம்மனைவியைப் பிரிந்த பொழுதுகூட அவர் இவ்வளவு தூரம் மனமுடைந்ததில்லை!

சாதாரணமாக ரவியின் மனோநிலை சரியாக இருந்திருந்தால் சுந்தரேசனார் இவ்வளவு தூரம் அசந்துபோயிருக்கமாட்டார்!

அவன் தன் அம்மாவைப் பிரிந்த தாங்கொணாத் துயரத்தால் தன்னையே பறிகொடுத்து, சுயநினைவையே மறந்து அதிர்ச்சிக்குள்ளாகியிருப்பதினாலேயே சுந்தரேசனார் தவியாய் தவித்துக் கொண்டிருந்தார்!

மழை 'சோ' என்று பெய்வதைக்கூட மறந்து நின்ற இடத்திலிருந்து ஒரு அடிகூட எடுத்து வைக்காமல் நின்றுகொண்டிருந்த சுந்தரேசனாருக்கு இப்போதுதான் சுயநினைவு வந்தது!

'ஹோல்ஃபேஸ்' கடற்கரையில் —

கடல்போல் திரண்டிருந்த ஜனக்கூட்டம் அந்த ஒரு சில நிமிட நேரங்களில் எங்கு போய்ச் சேர்ந்ததோ என்று தெரியாமல் மறைந்துவிட்டது!

அங்கே —

இப்போது —

ஒரேஒரு மனிதர்மட்டும் தான் நின்றுகொண்டிருந்தார்!

அவர் வேறு யாருமல்ல — ஆசை மனைவியை பறிகொடுத்து, மீளாத்துயரத்திலிருந்து மீள்வதற்கு முன்னாலேயே தம்மகனையே உயிருடன் பறிகொடுத்துவிட்டு இப்போது நிற்கும் சுந்தரேசனார்தான்!

அவர் தோய்ந்துகொண்டிருந்தார்!

உடுப்பு முழுவதும் நனைந்து தண்ணீரில் அவர் உடல் கழுவப்பட்டுக் கொண்டிருந்தது!

லட்சாதிபதியான அந்தப் படித்தமனிதர் நிலை பரிதாபகரமாகவிருந்தது;

கன்னை ஒருவிதமாகத் திடப்படுத்திக் கொண்டு தனது கார்நின்ற இடத்தை நோக்கிப்போனார்.

நடக்க முடியாமல் நடந்தார்.

காருக்குள் ஏறியவர் தன் நனைந்துபோயிருந்த நிலையை மறந்து — காரை 'ஸ்ராட்' செய்துகொண்டு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வேகமாக ஓட்டினார்!

கொழும்பு காலி வீதியைக் கிழித்துக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தது —

சுந்தரேசனாரின் விலை மதிப்புமிக்க அந்த பெரியகார்!

திடீரென்று காரை நிறுத்தினார் சுந்தரேசனார்!

இறங்கியவர் —

தண்ணீர் சொட்டச் சொட்டப் போலிஸ் நிலையத்துக்குள் நுழைந்தார்.

இன்ஸ்பெக்டரின் அறைக்குள் நுழைந்தார்.

இன்ஸ்பெக்டரிடம் தன் மகன் திடீரென்று காணாமல் போய்விட்டதை சொன்னதும் —

இன்ஸ்பெக்டர் அதற்குப் பதிலாக சொன்ன ஒரு தகவல் மேலும் அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது?

(தொடரும்)




[5-ம் கலத் தொடர்ச்சி]

கெட்ருல்'' என்ற மலேஷியா செல்லும் கப்பலில் என மலேஷியாப் பயணத்தை ஆரம்பித்தேன்

புதுமையான அனுபவம்!

கப்பல் அறை அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது! எனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் என்னுடன்கூடவே 5 பேர்பயணம் செய்தார்கள் சிலமணி நேரங்களுக்குள் அவர்கள் என்னுடன் மிக நெருங்கிப் பழகினார்கள். இலங்கையர் என்று தெரிந்து கொண்டதும், மிக மிக அன்பாகப்பழகினார்கள். அவர்கள் ஹிந்தி பேசுபவர்கள்.

என்னை யாழ்ப்பாணத்து மாணவன் என அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

அந்த அறையில் எனது பொழுதைப்போக்குவதற்கு வசதிகளும் செய்துதரப்பட்டிருந்தது. 6 நாட்கள் அந்தக் கப்பலில் இருந்ததே ஒரு தனி அனுபவம்! என்னுடன் வந்தவர்கள் என் நாட்டைப்பற்றி நிறையநிறையக் கேட்டார்கள்.

கப்பலுக்குள் "கரம்" போன்ற சின்னச்சின்ன உள்ளிளையாட்டுகளுக்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. இதனைவிட 2 சினிமாப் படமும் கப்பலுக்குள் பார்த்தேன்! ஒன்று தமிழ்ப்படம் மற்றது ஆங்கிலப்படம்.

6 நாட்கள் எப்படி ஓடி மறைந்ததென்று தெரியாது!

22-ம் திகதி காலை 9மணி-

பினாங் துறைமுகத்தை என்னைத் தாங்கிக்கொண்டு சென்ற கப்பல் சென்றடைந்தது!

பினாங் துறைமுகத்தில் எனக்காக என் தந்தையார் காத்துக் கொண்டிருந்தார்.

6 ஆண்டுகளுக்குப் பிறகு எனது தந்தையாரைக் காண்கிறேனென்றால்--

அப்பப்பா! மகிழ்ச்சிக்கு சொல்லவேண்டுமா?

பினாங் துறைமுகத்திலிருந்து என் தந்தையார் என்னை அருகுள்ள பெரிய ஹோட்டலுக்குக் கூட்டிச் சென்றார். அன்றிரவு ஹோட்டலிலேயே கழித்தோம்!

அடுத்த நாள்!

பினாங் நகரத்தை சுற்றிப் பார்த்தேன்! பினாங்கில் சீனர்கள் முழுக்க முழுக்க வசிக்கிறார்கள். எந்தக் கடைக்குப் போனாலும், சீனர்கள்தான் இருப்பார்கள். அவர்கள் மஞ்சள் நிறத்தவர்கள். அவர்களில் நல்லவர்களும் உண்டு. முரட்டுக்குணம் படைத்தோரும் இருக்கிறார்கள்!

அழகுக்கு ஒரு பினாங் என்றும் சொல்லலாம்! அங்கேயுள்ள அழகான காட்சிகள் என்னைக் கவர்ந்தேவிட்டன!

மறுநாள் —

பினாங்கிலிருந்து மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூருக்கு என் தந்தையாருடன் டாக்ஸி ஒன்றில் சென்றேன்! சுமார் ஒன்றரை மணி நேரத்தில்

# மலேஷியாவில் இரு மாதம்!

-க. குலேந்திரராசா

[உடுப்பிட்டி அ. மி. கல்லூரியில் ஜி. சி. ஈ. [சாதாரண] வகுப்பில் பயிலும் வல்வெட்டியைச் சேர்ந்த மாணவரான செல்வன் க. குலேந்திரராசா [18 வயது] மலேஷியாவுக்குச் சென்றுதிரும்பியுள்ளார். அங்கு தொழில் புரியும் தன் தந்தையாருடன் 2 மாதகால விடுமுறையைக் கழித்து விட்டு வந்துள்ள இவர் தனது சுவையான பிரயாண அனுபவத்தை இங்கு விபரிக்கிறார்.]

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி

அன்றுதான் நான் என் மலேஷியாப் பிரயாணத்தை ஆரம்பித்தேன்! பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சிக்கு விமானம் ஏறினேன். விஞ்ஞானத்துறையில் ஏதேதோ எல்லாம் செய்யும் இந்த யுகத்தில் நான் அரைமணிநேரத்தில் திருச்சியைப் போய்அடைந்துவிட்டது என்று சொன்னால் அதில் அதிசயமொன்றுமில்லையே! பின்னர் மறுநாள் திருச்சியிலிருந்து சென்னை நோக்கி ரயிலேறினேன்! சென்னையில் 3 தினங்கள் தங்கி சில இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு 16-ம் திகதி காலை "ஸ்டேட் ஒவ்

[3ம் கலம்பார்க்க]


# 'சாய் யாத்திரஸ்'

## தென் இந்திய யாத்திரை

எங்கள் விசேஷ தென் இந்திய [18 நாட்கள்] கூட்டு யாத்திரை ஆரம்ப தினம் 6-ம் திகதி மார்கழி [6—12—1968].

★ திருச்சி-பங்களூர்-மைசூர் பிருந்தாவனம்-சென் பிலோமினா தேவாலயம்-மதராஸ் - காஞ்சிபுரம்-மகாபலிபுரம் - திருக்கழுக்குன்றம் - இராமேஸ்வரம் - மதுரை-திருப்பரங்குன்றம்-பழநி ஆகிய புனித நகரங்களில் உள்ள எல்லா முக்கிய புண்ணிய ஸ்தலங்கள் தரிசித்தல்.

★ பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபா அவர்களின் "பிரசாந்தி நிலையம்" புண்ணிய ஸ்தலம்.

விசேஷ முதல் வகுப்பு றெயில் பெட்டி படுக்கை வசதிகளுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கும் பெயரை பதிவு செய்வதற்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

"சாய் யாத்திரஸ்"
C/o கல்யாணி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

# 8 கோஷ்டிகள் மோதலில் ஏற்பட்ட முடிவுகள்

## சென்ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு மிடையில் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆரம்பத்தில் கொக்குவில் கோஷ்டி நன்றாக விளையாடிய போதிலும் முடிவில் சோர்வுற்று காணப்பட்டது. இடைவேளையின்போது சென்ஜோன்ஸ் 2—1 கோல்களைப் பெற்றிருந்தது. ஆட்ட முடிவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும்போது சென். ஜோன்ஸ் கோஷ்டியின் விளையாட்டு மிகவும் சிறப்பாக இருந்தது. ஆட்ட முடிவில் சென்ஜோன்ஸ் கோஷ்டி 4-1 கோல்களால் எதிர் கோஷ்டியை வெற்றிபெற்றது.

## மகாஜனா வெற்றி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மிக விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இடைவேளையின் போது இரு கோஷ்டியினரும் 1—1 கோல்களைப் பெற்றிருந்தது. ஆட்ட இறுதியில் மகாஜனாக் கல்லூரியின் முன்னணி வீரர்களின் திறமையான விளையாட்டினால் மேலும் 2 கோல்களைப் போட்டனர். ஆட்ட முடிவில் மகாஜனாக் கல்லூரி எதிர்க்கல்லூரியை 3—1 கோல்களால் தோற்கடித்தது.

## யாழ் மத்தியகல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.

ஆட்ட முடிவின்போது மத்திய கல்லூரியினர் சுறுசுறுப்பாக விளையாடி ஒரு கோலைப் போட்டு எதிர் கோஷ்டியைத் தோற்கடித்தனர்.

## கொக்குவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் கொக்குவில் மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவுக் 3—1 கோல்களாலும், 'பி' பிரிவில் 4—0 கோல்களாலும், 'சி' பிரிவில் 5—0 கோல்களாலும் கொக்குவில் இந்து வெற்றி பெற்றது.

[தே.நி

# அனுராதபுர கோஷ்டியை யாழ். சென். பற்றிக்ஸ் வென்றது

உடுவில், வெள்ளி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டிக்கும் அனுராதபுரம் புனித வளன் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இருபிரிவுகளிலும் சென் பற்றிக்ஸ் வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 'ஏ' பிரிவுக் கோஷ்டி 7 கோல்களையும் 'பி' பிரிவு கோஷ்டி 3 கோல்களையும் பெற்று வெற்றியீட்டின.

அனுராதபுரக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

# புத்தளம் முதலிடம்

புத்தளம், வியாழன்

புத்தளம் ஸஹிரா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற பாரம் தூக்கி, தேக அப்பியாசப் போட்டிகளில் புத்தளம் கோஷ்டி முதலிடம் பெற்றது.

கொழும்பு, கண்டி, சிலாபம், புத்தளம், அனுராதபுரம் முதலிய இடங்களிலிருந்து பலர் இப்போட்டியில் பங்கு பற்றினர்.

புத்தளம் 11 புள்ளிகளையும், கொழும்பு 10 புள்ளிகளையும், கண்டி 7 புள்ளிகளையும் பெற்றன. கண்டியைச் சேர்ந்த வந்துகொடபிற்றி ஆன் அழகன் போட்டியில் முதலிடம் பெற்று சாலிம் கரைக்கர் வெற்றிக் கேடயத்தைப் பெற்றார்.

# சாவகச்சேரிக்கு இடமாற்றம்

பூநகரி, வெள்ளி

பூநகரிப்பகுதியில் மலேரியா தடுப்பு இலாகா உதவி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய கொக்குவிலைச் சேர்ந்த எஸ். சற்குணம் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் சாவகச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது சேவையைப் பாராட்டி இப்பகுதி இளைஞர்களால் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது.

# இன்றைய பலன்

12-10-68

புரட்டாதி 26 உ

சனிக்கிழமை

திதி-ஷஷ்டி இரவு 6-19 மேல் ஸப்தமி.

நட்சத்திரம் - மிருகசீரிடம் இரவு 12-53 மேல் திருவாதிரை.

ராகுகாலம் - 9-02—10-32.

சுபநேரம் - 3-02 - 4-32

இன்று பிறந்தவர்களுக்கு - வாழ்க்கை வசதி நிறைந்ததாக இருக்கும். இசையில் மகிழ்ச்சியும், இல்லறச் சிறப்பும் நிலவும். பிரம்மச்சாரிகளின் வாழ்க்கையில் காதல் கனவு தோன்றும். பெண்களின் வாழ்வு உணர்ச்சிமயமானதாக இருக்கும். சிலருக்கு வாய்வு சம்பந்தமான நோய் தென்படலாம். கடமையில் ஆர்வமும், கடவுள் நம்பிக்கையும் அதிகமேற்படும். பெரியோர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். எழுத்துத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். பொதுவாகச் சுக போகமான காலம்.

மேஷம் - முயற்சி வெல்லும். முதலீடுமுண்டு.

ரிஷபம் - மக்கள் பிணி, மனப்போராட்டம்.

மிதுனம் - வர்த்தக இலாபம், விசேடப் பார்வை.

கடகம் - இருக்குமனம், இரண்டு வாழ்வு.

கன்னி - வாகன சுகம், வாழ்விலும் நலம்.

துலாம் - பிள்ளை லாபம், பெருமை, பிறர் ஆதரவு.

விருச்சிகம் - ஏகாந்தம், இல்லையென்பாரா துடை.

தனுசு - காதல் அரும்பு, சுவைத்திட விரும்பு.

மகரம் - புதிரான வாழ்க்கை, மாறுதோற்றம்.

கும்பம் - வணிகத் தொடர்பு, சுற்றுலாவிருப்பம்.

மீனம் - சொல்லிலே கலை, மறைந்துவிடும் பகை.

சோதிடக் கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 12—10—68

(செய்திகள்: காலை 7-00, பகல், 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அல் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சமயநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள். 7-30 முருகவேள், 8-00 இசைவேளை, 8-15 இலவசரிய கீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்தநிலை வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 கானாஞ்சலி, 6-45 பாவலம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 இசைச்சித்திரம், 10-15 தேர்ந்தஇசை.


ஷெல் களைப்புற்கொல்லிகள் 'எம்-50,' 'டி'
ஏக்கருக்கு ரூ. 5/-க்கும் குறைந்த செலவில்
விளைச்சல் 30%
ஏற்றமடையச் செய்கின்றன.

உங்கள் நெல் விளைச்சல் சராசரிக்கும் குறைவாக இருக்கிறதா? ரூ. 5/-க்கும் குறைவான அல்லது ஆக மூன்றில் ஒரு புசல் நெல்லின் விலை அளவு செலவில் ஒவ்வோர் ஏக்கரிலும் விளைச்சல் பெருகச் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானால் உங்கள் நெற்பயிர் 3-4 வாரப் பருவமுடையதாயிருக்கும் கட்டத்தில் அதற்கு ஷெல் களைப்புற்கொல்லி 'எம்-50' அல்லது ஷெல் களைப்புற்கொல்லி 'டி' தெளித்தால் போதும். இந்த நடைமுறை உங்கள் வேளாண்மையில் 30% வீதம் வரை குறையாடும் சந்தனக் கோரை, சிறு கோரை, மும்முட்டுக் கோரை, சிடச்சி போன்ற அகன்ற இலைக் களைகளைப் பூண்டோடு அழிக்கும்.




ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL

எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை மாவிக்காரெனில்.
AGENTS
ரோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருக்கிய தங்கக் கட்டிகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்

## நகைவியாபாரி வீட்டில் நடைபெற்ற திடீர் சோதனை

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள ஒரு நகை வியாபாரியின் வீட்டில் நேற்றிரவு சுங்கப் பகுதியினர் திடீர் சோதனையிட்டு உருக்கிய தங்கக் கட்டிகள் சிலவற்றைக் கைப்பற்றினர்.

இரகசியத் தகவல் ஒன்றைத் தொடர்ந்து தாங்கள் திடீர் சோதனையிட்டதாகவும் சோதனையின்போது உருக்கிய தங்கக்கட்டிகள் இருக்கக் கண்டெடுத்ததாகவும் சுங்கப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

நகை வியாபாரியான அவரது வீட்டில் கைப்பற்றப்பட்ட தங்கக்கட்டிகளின் பெறுமதியற்றி இன்னும் மதிப்பிடவில்லையென்றும் சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறுமதியிருக்கலாமெனவும் சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தங்கக்கட்டி கைப்பற்றப்பட்டவரின் வீட்டுக்கு அருகேயுள்ள ஒருவரின் வீட்டையும் சுங்கப்பகுதியினர் சோதனையிட்டனர். அங்கு அவர்கள் எதிர்பார்த்த தொன்றும் கிடைக்கவில்லை.

இதன்பின் அந்த வீட்டுக்காரர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ள புகார் முறைப்பாட்டில் தமது வீட்டில் தாம் வைத்திருந்த 13,000 ரூபாய் ரொக்கப்பணத்தைக் காணவில்லையென்றும் சுங்கப்பகுதியினர் வீட்டைச் சோதனை போட்டுச் சென்றபின் தான் பணம் காணாமல்போனதென்றும் தெரிவித்துள்ளார். இப்புகார் பற்றி பொலிஸார் விசாரணைசெய்கின்றனர்.

---

## பாலை என்ன செய்வது?

சுழிபுரம், வெள்ளி

பாலைக்கறந்து வைத்துக் கொண்டு வாங்குவார் இன்றியே என்று மாட்டுச்சொந்தக்காரர்கள் தவிக்கிறார்கள் இந்தத்தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு தனிப்பட்ட கடைக்காரர் குறைந்த விலைக்குப் பாலைப்பெறுகிறார்கள்.

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்துக்கு பால் கொடுத்துவந்த பால் மாட்டுச் சொந்தக்காரர்களே இந்த நிலைக்காளாகியுள்ளனர். சங்கம் பூட்டப்பட்டதால்தான் இந்தநிலை ஏற்பட்டுள்ளது. தனிப்பட்ட கடைச் சொந்தக்காரர்கள் ஒருபோத்தல் பால் முப்பது சதத்துக்கு வாங்க முன்வருகின்றனராம்.

---

## நம்பிக்கையில்லா பிரேரணை

### பதினாறாம் திகதி வருகிறது

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லைப் பிரேரணை இம்மாதம் 16-ம் திகதி கூட்டப்படும் விசேஷ கூட்டத்தில் கொண்டுவரப்படுகின்றது. இக்கூட்டத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். முருகவேல் கூட்டுகின்றார்.

நகரசபையின் தற்போதைய தலைவரான க. கனகரத்தினம் மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவர அவசர கூட்டம் கூட்டுமாறு மேற்படி நகரசபையின் எட்டு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைத்ததைத் தொடர்ந்தே இக்கூட்டம் கூட்டப்படுகின்றது. (ச. நி)

---

## பாரதம் செல்லுகிறார்

உரும்பராய், வெள்ளி

மருதனாமடம் இந்திய சேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஜனா சாம் அல்பிரட் [சாம் அண்ணன்] [illegible] இன்று இந்தியா பயணமாகின்றார். இவர் ஆறுமாதகாலம் அங்குள்ள கல்லூரி ஒன்றில் கல்லூரிக்குருவாகப் பணியாற்றச் செல்கிறார்.

---

## திருட்டு

யாழ்ப்பாணம் சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியொன்றில் உள்ள அந்தோனியார் தேவாலயமொன்றில் நேற்று முன்தினமிரவு, இனந்தெரியாத நபர்களால் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டதாக தெரியவருகிறது.

வழமைபோல் இரவு கோவில் கதவுகளை பூட்டும்போது யாரோ இனந் தெரியாத ஒருவர் கோவிலினுள் இருந்திருக்கலாம் என்றும் அவரே திருடிவிட்டு, மறுநாள் பூசைக்கு கதவுகள் திறக்கப்பட்டபோது, கோவிலை விட்டு வெளியேறி இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. இதுபற்றி பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (தெ. நி)

---

## ஆஸ்பத்திரியென நினைத்து கச்சேரிக்குப் போனாராம்

யாழ்ப்பாணம், வியா.

கச்சேரி மேல்மாடிக் கட்டடத்தை ஆஸ்பத்திரி என நினைத்து அதற்குள் சென்ற வயோதிப நோயாளி ஒருவர் கச்சேரி மேல்மாடியிலுள்ள 'வார்ட்'டுக்கு தன்னைக் கொண்டு சென்றுவிடும்படி அங்கு நின்ற ஊழியர்களைக் கேட்டார். ஆனால் இந்த நோயாளி ஆஸ்பத்திரி உடுப்புடன் ஆஸ்பத்திரியிலிருந்து எவ்வாறு வெளியேறி கச்சேரிக்கு வந்தாரென்பதுதான் அங்கு நின்றவர்களுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. ஆஸ்பத்திரி 14-ம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவரும் கோண்டாவிலைச் சேர்ந்த முத்துத்தம்பி என்பவரே இவ்வாறு நடந்துகொண்டவராவார்.

இடம்மாறி கச்சேரிக்குச் சென்ற இந்த நோயாளியை திரும்பவும் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு உதவி செய்யச்சென்ற கச்சேரி ஊழியர் ஒருவருக்கு ஆஸ்பத்திரி அதிகாரிகள் உதவியளிக்க மறுத்துவிட்டார்களாம். தொலைபேசியில் வார்ட்டுக்கு கதைக்கமுடியாதென்றும், பிரதம லிகிதர் இதுபற்றித் தனக்குத்தெரியாதென்றும், ஆஸ்பத்திரி காரியதரிசி இதை வார்ட்டுக்குத்தான் தெரிவிக்கவேண்டும் என்று தட்டிக்கழித்த பின்னர் ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரீண்டனே கடைசியில் கைகொடுத்தாராம்.

கச்சேரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அம்புலன்ஸ்வண்டி யொன்று அந்த நோயாளியை மீண்டும் ஆஸ்பத்திரிக்குக்கொண்டுவந்து சேர்த்தது. [கா. நி.]

---

### பெட்ரோல் தாங்கிகள்

## 102-ல் இரண்டு மட்டும் உபயோகிக்கப்படுகிறது

கொழும்பு, வெள்ளி

திருக்கோணமலையில் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 102 பெட்ரோல் தாங்கிகளில் இப்பொழுது 2 தாங்கிகள் மட்டுமே உபயோகிக்கப்பட்டு வருவதால் மிகுதியை பிற நாடுகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கலாமென இந்தக் கூட்டுத் தாபனம் செய்துள்ள சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

பிற நாடுகளின் ஆதிக்கம் ஏற்பட இது வழிவகுத்துவிடுமென்பதாலும் நடுநிலைக் கொள்கைக்குக் குந்தகம் விளைந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படலாமெனக் கருதப்படுவதாலுமே அரசாங்கம் இதற்கு மறுப்புத் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, அமெரிக்கா, குவாய்த் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்த தாங்கிகளைக் கேட்டுள்ளன.

1964ம் வருடத்தில் இந்த பெற்றோல் தாங்கிகளை இலங்கை பிரிட்டனிடமிருந்து வாங்கியிருந்தது.

---

# காங்கேசன்துறையில் உலகவங்கி நிபுணர் ஆராய்ச்சி

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசன்துறை துறைமுகத்தைப் பார்வையிட்ட உலக வங்கி நிபுணர் திரு. ஜே. டபிள்யு. லொடேன் இங்குள்ள வேலைபற்றிய முழு விபரங்களையும் பகுதி [illegible] குமாஸ்தாக்கள் சம்பந்தினரிடமிருந்து அறிந்துகொண்டார்.

இலங்கை வந்திருக்கும் உலக வங்கி நிபுணர் ஜே. டபிள்யு. லொடேன் தேசிய [illegible] அமைச்சைச் சேர்ந்த திரு. நித்தியானந்தன், சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. பேரம்பலம், காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பார்வையிட்டதுடன் தொழிலாளர்களின் வசதியீனக் குறைவுகள் பற்றி ஆராய்ந்தனர்.

காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்கு உலக வங்கியிடம் கடன் எடுப்பதற்கே திரு. லொடேன் இங்கு விஜயம் செய்துள்ளார். காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்கான இயந்திரங்கள் பல அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் இங்கு வரவிருப்பதாக அறியப்படுகிறது. துறைமுகத்தின் கரையோரப் பகுதி வேலைகளை அரசினர் பொறியியலாளர் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்க விருப்பதாகவும் ஆழக்கடல் வேலைகளை ஜெர்மன் நிபுணர்கள் மேற்கொள்ள இருப்பதாகவும் துறைமுக சரக்குக்கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## அண்ணன் பேசினாராம் தம்பி தற்கொலை

பூநகரி, வெள்ளி

மாடுகளைப் பட்டியில் அடைக்கவில்லையென அண்ணன் பேசியதால் கோபம் கொண்ட தம்பி ஒருவர் தனது வாழ்வையே நச்சுத் திராவகத்துக்குப் பலியாக்கிக்கொண்டார்.

இப்பரிதாபச் சம்பவம் பூநகரிப்பகுதியிலுள்ள [illegible]பதி என்ற இடத்தில் கடந்த இரவு நடைபெற்றது. செல்லத்துரை ராசசேகரம் (18 வயது) என்பவரே மரணமானவராவார்.

இவர் மூன்று மணிநேரமாக அவஸ்தைப்பட்டபின்னரே ஆஸ்பத்திரியில் மரணமானதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திரு. ரி. பரமசாமி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

---

## "சகோதரனை இழுத்தார், மறித்தேன் கத்தியால் வெட்டினர்"

### தந்தைமீதானவழக்கில் மகன்சாட்சியம்

திருமலை, வெள்ளி

தனது இரு மைந்தர்களையும் கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக தந்தை ஒருவர், திருக்கோணமலை உப்புவெளியைச் சேர்ந்த குறிப்பிட்ட நபரான முகம்மது ராஜாமீது பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருமலை மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. எஸ். பி. குணரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் எம். ஆர். அப்துல் கபூர், எம். ஆர். அபுசாலிப் ஆகிய இருசகோதரர்களையும் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 2-ம் திகதி கத்தியால் வெட்டிக் காயம் விளைவித்ததாக இவர்களது தந்தையான முகம்மது ராஜாமீது பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விசாரணையின் போது அப்துல் கபூர் சாட்சியமளித்ததாவது:-

சம்பவமடைந்த நாம் இருவரும் சகோதரர்கள். நான் மணமாகி தனிக்குடித்தனம் நடத்துகின்றேன். சம்பவம் நடந்த தினத்தன்று மாலை 6-30 மணியளவில் நான் எனது மற்றொரு சகோதரரான ரசிக்குடன் வீதியில் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எனது தந்தையான எதிரியின் வீட்டையும் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது அப்போது எனது தந்தை ஓடிவந்து என்னுடன் வந்த சகோதரனை இழுத்துச் சென்றார். நான் தடுத்தேன். என்னைக் கத்தியால் வெட்டிவிடுவதாகப் பயமுறுத்தியதோடு கத்தியால் எனது வலது காலிலும் வெட்டினார். அதன் பின்னர் தான் எனது மற்றச் சகோதரரான அபுசாலிப்பும் கத்தியால் வெட்டப்பட்டுள்ளார் என்பது எனக்குத் தெரியவந்தது.

எதிர்தரப்பில் வழக்கறிஞர் ஆர். சம்பந்தன் ஆஜராகியிருந்தார். டாக்டர் ராஜலிங்கமும் சாட்சியமளித்த பின்னர் மாஜிஸ்திரேட் விசாரணையை அடுத்தமாதம் 8-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு மீண்டும் வேலை வழங்கும்படி சிபார்சு

யாழ்ப்பாணம், வியா.

"இறந்தவரின் உடலெங்கும் சாணமண் ஒட்டியிருந்தது. இதனால் இறந்தவரின் உடம்பின் மேற்பகுதியில் எங்கு காயமிருந்தாலும் அதனை எவராலும் கண்டுபிடிக்க முடியாது"

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் சட்ட வைத்தியராகக் கடமையாற்றிய டாக்டர் சி. சிவசுப்பிரமணியம்.

1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் செல்லன் சின்னத்தம்பி என்பவர் [illegible]யுடன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவர் மரணமானதால் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவில்லையென தெரிவிக்கப்பட்ட புகாரின் பேரில் ஒரு பொலிஸ் சார்ஜன்டுக்கும் இரு கான்ஸ்டபிள்களுக்கும் எதிராக இக்குற்றச்சாட்டு விசாரணை [illegible] சுப்பிரீண்டன் திரு. [illegible] மன் நடத்தினார்.

டாக்டர் சி. சிவசுப்பிரமணியம் மேலும் சாட்சியமளிக்கையில், இறந்தவர் முழுக்க கறுப்பு நிறமானவராக இருந்ததாலும், அவர் கேணிக்குள் விழுந்து பின்னர் நிலத்தில் புரண்டு அவரது தேகமெங்கும் சாணம் ஒட்டியிருந்தாலும் தேகத்தில் இருந்த எந்தக் காயத்தையும் எந்தப் பொலிஸாராலும் கண்டுபிடிக்க முடியாதிருந்திருக்கலாமெனவும் குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து இக்குற்றச் சாட்டின் பேரில் ஏற்கனவே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும் அவருக்கு மீண்டும் வேலை வழங்குமாறும் சிபார்சு செய்து மனு வொன்றை பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு வடபகுதி பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் அனுப்பி வைத்துள்ளார். (வா. நி)

---

## மாதர் - சிறுவர் நூல்நிலையம்

யாழ்ப்பாணம், சனி

மாதர், சிறுவர் ஆகியோருக்கு புத்தகங்களை இரவல் கொடுத்து அறிவைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு வட்டுக்கோட்டைச் சங்கசமூகத்தின் ஆதரவில் வித்துவான் இ. பாலசுப்பிரமணிய ஐயர் தலைமையில் ஒரு நூல்நிலையத்தை சுப்பிரமணிய வித்தியாசாலை முன்னைநாள் முகாமையாளர் திரு. க. நாகலிங்கம் திறந்து வைத்தார். ந. நி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org